Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். STC 287/2024**

வழக்கு சாட்சி எண். PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதாய் | கிராமம் | : | பறையப்பட்டி |
| கணவர் பெயர் | : | மெய்யழகன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 60 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி1ம் ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் அவரது வழக்கறிஞர் ஆஜர்).
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21**th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் பறையப்பட்டியில் வசித்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கின் மற்ற எதிரியையும் தெரியும்.

சுமார் 10 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் நான் எதிரியின் வீட்டருகில் உள்ள பொது பைப்பில் தண்ணீர் பிடிப்பதற்காக சென்றேன். அப்போது 2ம் எதிரி கடையில் இருந்து டப்பாக்களை எடுத்து வீசிக்கொண்டிருந்தார். நான் அதை பார்த்துவிட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அசா1ஐ தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**